சப்ரகமுவ மாகாண சபை 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சப்ரகமுவ மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பிரிவு மற்றும் 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்ரையிலுள்ள 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுனருக்குச் சமர்ப்பிக்கப்படும்..

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மாகாண சபைகள் பிடித்துவைத்தல் வரிக்கு கட்டுப்பட்டு இல்லாததனால் மீளாய்வாண்டில் வங்கி வட்டியிலிருந்து கழித்த வரியானது வட்டிக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கியதனால் ஆண்டிற்கான வருமானம் ரூபா 9,614,383 ஆல் குறைவடைந்திருந்தது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் பேது உரிய பெறுமதியை திருத்தி ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 மாகாண நிறுவனங்களில் காணப்பட்ட நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா 2,329,009,388 மாகாண சபை நிதியத்தின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்து கணக்கிட்டு முடிவுறுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | நிதியத்தின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் பிரதம செயலாளர் அலுவலகத்தின் கீழ் நடைமுறை வேலைகள் ரூபா 15,705,829 காட்டப்பட்டிருந்தும் அந்த அலுவலகத்தின் ஏடுகளில் அவ்வாறான பெறுமதி இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது இப்பெறுமதியை உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்குவதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு மாகாண திறைசேரியினை உள்ளடக்கி ஒவ்வொரு நிறுவனத்தின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சப்ரகமுவ மாகாண சபையினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தனது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை

வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 800 – ஆளுனர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒவ்வொரு நபருக்கும் தகமையுள்ள எரிபொருள் படியினை மற்றுமொரு நபருக்கு வழங்குவதற்கு பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/2 ஆம் இலக்க 2018 ஒக்தோபர் 12 ஆந் திகதிய சனாதிபதி செயலக சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை.<br>எனினும் கௌரவ ஆளுனர் அவர்கள் நாட்டிற்கு வெளியே இருந்த காலத்தில் அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூபா 725,000 எரிபொருள் படியானது அவரின் பிரத்தியேக செயலாளருக்குச் செலுத்தக்கட்டிருந்தது. | அதற்காக கௌரவ ஆளுனருககு தகமையுள்ள எரிபொருள் படியினை வழங்குமாறு அவர் வழங்கியிருந்த கட்டளைக்கு இணங்க 2022 செப்தெம்பர் மாத எரிபொருள் படியானது அவரின் தனிப்பட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆளுனரின் செயலாளர் அலுவலகத்திற்குரிய ஒரு வாகனம் 2020 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகி திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தும் திருத்தம் செய்தல் தொடர்பான ரூபா 5,983,937 இழப்பீட்டுப் பணம் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | துரிதமாக விசாரணை நடவடிக்கைகளை முடிவுறுத்தி அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | இழப்பீட்டுப் பணத்தை துரிதமாக பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | அவசர சந்தர்ப்ப நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் பிரகாரம் சப்ரகமுவ மாகாணத்தின் எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ளும் குறிக்கோளில் அவசர சந்தர்ப நிதியம் உருவாக்கப்பட்டது. எனினும், தற்பொழுது 33 ஆண்டுகள் கடந்திருந்தும் மாகாணத்தில் இடம்பெற்ற வெள்ளம், கொரோனா தொற்றுநொய் போன்ற இன்னல்களுக்காக எப்பணமும் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவசர சந்தர்ப்ப நிதியத்தின் கீழ் பணத்தை பயன்படுத்தும் தேவைப்பாடு உருவாகியிருக்கவில்லை. | நியதிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 801 – மாகாண சபை செயலாளர் அலுவலகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபை செயலாளர் அலுவலகத்தின் 18 பிரதான செயற்பாடுகளில் செயலாற்றல் தொடர்பான செயற்பாடுகள் 09 ஆகும். மாகாண சபை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதனால் அச்செயலாற்றல் தொடர்பான செயற்பாடுகள் அனைத்தும் செயற்படாது காணப்பட்டன. | மாகாண சபை கலைக்கப்பட்டதனால் மீண்டும் ஒரு தேர்தலினை நடாத்தி சபை ஸ்தாபிக்கப்படும் வரை செயலாற்றல் தொடர்பான செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கான இயலுமை இல்லை. | சபை செயற்பாடற்றுள்ளதனால் பதவியினரை வினைத்திறனாக இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | சபை செயலாளர் அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 22 நபர்கள் சேவையாற்றி வருகின்றார்கள். எனினும், மாகாண சபை கலைக்கப்பட்டதனால் தெரிவுக் குழுவினை உள்ளடக்கி அதிகளவான கடமைகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன. எவ்வாறாயினும் 05 ஆண்டுகள் காலமாக காணப்பட்ட ஊழியர் மிகையினை சபையின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் வரை வினைத்திறனாக ஏனைய அலுவலகங்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு உள்ள இயலுமையானது ஆராய்ந்து பார்க்கப்பட்டிருக்கவில்லை | மாகண சபையை கலைத்ததன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும். மீண்டும் ஸ்தாபிக்கப்படும் எனக் கருதி மதிப்பீடு தயாரித்தல் முதலியன இடம்பெற்றது. அதற்கிணங்க அலுவலகத்தில் பதவியினர் மிகையாக உள்ளனரா என்பதனை கவனித்துப் பார்த்தல் செய்யப்படவில்லை. | ஊழியர் மிகையினை வினைத்திறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 802 – மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பரீட்சாத்திகள் இல்லாத நிலையில் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழவினால் 2022 ஆம் ஆண்டில் பரீட்சைகளை நடாத்துவதற்கு | சில பரீட்சைகளுக்காக விண்ணப்பங்கள் சமர்ப்பித்திருக்காததனால் அப்பரீட்சைகள் | பரீட்சைகளை திட்டமிடும் போது அனைத்து பிரிவுகளையும் |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்பட்டதனால் பரீட்சாத்திகள் சமூகமளிக்காததன் அடிப்படையில் 13 பரீட்சைகள் நடாத்தப்படவில்லை. | நடாத்தப்படவில்லை. | ஒருங்கிணைப்பு செய்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 804 – மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 63,096,062 ஆக இருந்த போதிலும் அந்த வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் போது திட்டமிடப்படாத ஒரு செயற்பாடு என்பதனால் மதிப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மதிப்பீட்டினை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | சப்ரகமுவ மாகாண சபையின் குருவிடவில அமைந்துள்ள ரூபா 1,500,000 பெறுமதியான ஒரு உத்தியோக பூர்வ இல்லம் எதுவித திருத்த வேலைகளும் இன்றி 20 ஆண்டுகள் காலமாக பயன்படுத்தப்படாது காணப்பட்டது. இந்த உத்தியோக பூர்வ இல்லத்தினை பொறுப்பேற்றல் எந்த நிறுவனத்திற்கும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உத்தியோகபூர்வ இல்லமானது மாகாண சபையை தோற்றுவிப்பதற்கு முன்னர் பெருந் தெருக்கள் திணைக்களத்தின் கீழ் காணப்பட்டது. | சொத்துக்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பிரதம செயலாளர் அலுவலகத்தினால் பெறுகை வழிகாட்டிக் கோவைகளின் 2.6.1 (அ) (ii) ஆம் வழிகாட்டிக்கு இணங்க தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பு தொடர்பாக மீளாய்வு செய்யப்படாது ரூபா 1,140,000 தொகைக்கு 06 லெப்டொப் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | விலை மனுக்கள் கோரப்பட்ட பொருள் விபரக் குறிப்பிற்காக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அமைச்சரவை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தும் சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதி | காணி தொடர்பான சுதந்திரமான வெகுமதிப் பத்திரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைத்ததன் | காணியை மாகாண சபையினால் பொறுப்பேற்றல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டுள்ள ரூபா 9,280,000 பெறுமதியான காணி 2023 ஏப்ரல் 09 ஆந் தகிதி வரை மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் காணியை ஒப்படைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். | |

**1.5.5 தலைப்பு இலக்கம் 808 – பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 03/2022 ஆம் இலக்க 2022 எப்ரல் 26 ஆந் திகதயி தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் அத்தியாவசியமான பகுதிகள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். எனினும் அதற்கிணங்க கேகாலை, தெஹியோவிட,ரம்புக்கன பிரதேசங்களின் ரூபா 524,613,811 தொகையான 40 நிர்மாண வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. . | நிர்மாண நடவடிக்கைகளை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் நிர்மாணிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் மக்களின் சிக்கலை குறைக்கும் வகையிலும் அவை நீண்ட காலம் நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்தும் வகையிலும் அதனைப் பூர்த்தி செய்தல் இடம்பெறுதல் வேண்டும். |
| (ஆ) | தெஹியோவிட பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 40,576,971 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்ட 06 சுகாதார கட்டிடங்களின் நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 சதவீதத்திற்கும் 82 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | மிகுதியான வேலைகளை முடிவுறுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மக்களின் சிக்கலை குறைக்கும் வகையிலும் அவை நீண்டகாலம் நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்தும் வகையிலும் அதனைப் பூர்த்தி செய்தல் இடம்றொறுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரம்புக்கன நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு மேலதிக நிறைவேற்று பொறியியலாளர் பதவி அங்கீகரிக்கப்படாதிருநதும் சப்ரகமுவ மாகாண பிரதிப் பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவைகள்) 2020 யூலை மாதத்திலிருந்து அப்பதவிக்காக ஒரு உத்தியோகத்தர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | அங்கீகரித்த பதவிக்காக மாத்திரம் இணைத்துக் கொள்ளுதல் இடம்பெறுதல் வேண்டும். |
| (ஈ) | பிரதி பிரதம செயலாளர் பொறியியல் சேவை அலுவலகத்தின் பொறுப்பில் காணப்பட்ட 08 உத்தியோக பூர்வ இல்லங்களின் உரிமையாண்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமையால் 30 ஆண்டுகள் காலமாக அந்த உத்தியோக பூர்வ இல்லங்களில் வசிக்கும் அதிகாரமற்றவர்களை அப்புறப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மாகாண சபைக்கு ஒப்படைப்பதற்குரிய ஆவணங்கள் சரியானது என்பதற்கான தகவல்களை கண்டுபிடிக்க முடியாததனால் இது சம்பந்தமாக மாகாண காணி ஆணையாளரிடமிருந்து உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்ளுமாறு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.6 தலைப்பு இலக்கம் 809 – மாகாண இறைவரித் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு ஆதனத்தை ஒப்படைக்கும் போது அந்த ஆதனத்தின் சரியான பெறுமதிக்கு முத்திரைக் கட்டணத்தை செலுத்தியிருத்தல் தொடர்பாக பரீட்சித்தலானது மாகாண இறைவரித் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகும். எனினும் | | |
| | (i) 2007-2016 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 05 சந்தர்ப்பங்களின் போது மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான முத்திரைக் கட்டணம் மற்றும் தண்டப் | ரூபா 407,105 நிலுவைப்பணத்தில் ரூபா 148,840 தற்பொழுது அறவிடப்பட்டுள்ளது. | நிலுவையான முத்திரைக் கட்டணத்தையும் தண்டப் பணத்தையும் தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணம் ரூபா 258,265 அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பதிவு செய்த ரூபா 95,400,000 தொகையான 59 அன்பளிப்பு உறுதிப்படுத்தல்களுக்காகவும் 2021 ஆம் ஆண்டில் இரத்தினபுரி காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்த ரூபா 05 இலட்சத்திற்கு மேற்பட்ட 3,004 உறுதிகளுக்காகவும் அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணங்களின் சரியான தன்மை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற உத்தியோகத்தர் தட்டுப்பாட்டினால் காணிப்பதிவாளர் அலுவலகத்தின் மூலம் வழங்கிய தகவல்கள் பு' ரணமற்றதனால் பல கோவைகளை திறப்பதற்கு முடியாதுள்ளது. | செலுத்தப்பட்ட முத்திரைவரி வருமானத்தை மதிப்பீடு செய்து அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அறவிடப்பட வேண்டிய நிலுவையான புரள்வு வரி 3,611,313 தொகையானது 2022 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது. அதனைத் தவிர்த்து புரள்வு வரி இரத்துச் செய்யப்பட்ட 2011 சனவரி 01 ஆந் திகதியில் காணப்பட்ட மீதியில் ரூபா 8,107,896 தொகையானது இன்னும் அறவிட வேண்டியிருந்தது. | இரத்துச் செய்யப்பட்ட வரி என்பதனால் தொடர்ச்சியாக செலுத்துதல் மற்றும் முன்வருதல் தவிர்க்கப்பட்டிருந்தது. நிலுவை வரியை அறவீடு செய்வதற்கு ஏனைய எந்த மாற்று வழியும் இல்லாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் இவ்வாறு வரி பதிவழிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படுதல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 810 – சட்டமும் ஒழுங்கும், நிதியும் திட்டமிடலும்,உள்ளூராட்சி, சுகாதாரம், உள்நாட்டு மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வியாபாரமும் உணவும், போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல்,ஊடகம், வீடமைப்பும் நிர்மாணமும், மற்றும் மதவிவகார மாகண அமைச்சு

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | முதலமைச்சு செயலாளருக்கு 2015-2021 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் கிடைத்த 21 ஒழுங்கீனங்கள் தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் 2022 திசெம்பர் வரை | இதற்குப் பின்னர் மேற்கொள்கின்ற ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படும். | ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் 06 ஒழுக்காற்று விசாரணைகளுக்கான விசாரணை அறிக்கைகளைச் சம்பர்ப்பிப்பதற்கு 06 மாதங்களுக்கும் 68 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் எடுத்திருந்தது. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது முதலமைச்சிற்குரிய ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை முழுமையான நட்டமாகக் கருதி காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 25 மில்லியன் காப்புறுதி இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு இணங்கிக்கிக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அப்போதிருந்த பிரதம செயலாளரினால் அந்த இழப்பீட்டினை நிராகரித்தும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக்கு முரணாகவும் அதனை திருத்தம் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கராஜிற்கு ஒப்படைக்கப்பட்டு 2019 பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 3,063,690 முற்பணமும் மேற்கூறிய காப்புறுதி முகவர் நிறுவனத்தினால் தனியார் கராஜிற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் தற்பொழுது 04 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் இன்றுவரை மோட்டார் வாகனம் மாகாண சபைக்கு கொண்டு வரப்பட்டிருக்காததுடன் முழுமையான காப்புறுதி இழப்பீட்டுப் பணமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தும் இதுவரை காப்புறுதி இழப்பீடானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தாமை சம்பந்தமாக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவிற்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2000-2018 ஆம் அண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் 30 வாகன விபத்துக்களின் காரணமாக ஏற்பட்ட ரூபா 32,736,100 நட்டத்தினை மாகாண நிதி விதி 54 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்குரிய திணைக்கள விசாரணைகள் முடிவடைந்துள்ளது. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 06 மாதங்களுக்கும் 06 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா 76,488,131 முற்பணங்கள் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கின்ற கட்டுநிதி அளவுக்கு இணங்க விலைப்பட்டியல்களை முடிவுறுத்தி முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படும். | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.7.1 சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாணங்கள் மற்றும் இயந்திரங்கள் அதிகார சபை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்** | | |
| (i) | அதிகார சபையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி இருப்பு ரூபா 970,337 தொகையும் உள்ளபடியான மீள்மதிப்பு இலாபம் ரூபா 4,500,000 தொகையும் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது அச்சிடல் இருப்பு சார்பாக இடம்பெற்றுள்ளதுடன் கணக்காய்விடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் தற்பொழுது நாட்குறிப்பு பதிவுகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | முடிவுறுத்தப்படாத வேலைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய 13 வாகனங்களின் திருத்தம் செய்தல் செலவுகள் ரூபா 1,576,967 தொகையானது ஆண்டிற்கான ஒரு செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | குறைத்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தை நாட்குறிப்பு பதிவுகளைப் பயன்படுத்தி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிப்பீடு செய்யப்பட்ட ரூபா 10,600,363 பணிக்கொடை நிதிய மீதியானது முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதிகார சபையின் நிதி நிலைமை சிறப்பாக அமைகையில் பணிக்கொடை நிதியத்தின் மீதியை தனியான ஒரு கணக்கில் வைப்புச் செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) செயற்பாட்டு மீளாய்வு**

| | | | |
|---|---|---|---|
| (i) | மாகாண பிரதம அமைச்சு செயலாளரினால் அதிகாரசபை சம்பந்தமா 2022 சனவரி மாதத்தில் வழங்கப்பட்ட தொடக்க புலனாய்வு அறிக்கையின் மூலம் இனங்காணப்பட்ட ரூபா 54,394,444 தொகையான 03 நட்டங்கள் தொடர்பான சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய விசாரணைக் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் சேதங்கள் நட்டங்கள் குழுவினை நியமிப்பதற்கான வேண்டுதல் பிரதம அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | நட்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிர்மாணங்கள் முடிவுறுத்தப்பட்ட 20 நிர்மாண வேலைகள் தொடர்பாக பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,168,803 பிணை வைப்புக்கள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சிவில் பிரிவிடமிருந்து கிடைத்த இலாபத்தை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைப்பு தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | நிர்மாணித்தல் அதிகார சபையின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் ICTAD நிறுவனத்தில் பதிவு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெளி நிறுவனங்கள் கேள்விகளைச் சமர்ப்பித்திருக்காததனால் அப்பதிவு செய்தல் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் பதிவு செய்தல் வேண்டும். |
| (iv) | அதிகார சபையின் பொறுப்பில் உள்ள 20 வாகனங்கள் மற்றும் 9 இயந்திரங்களில் 17 வாகனங்களும் அனைத்து இயந்திரங்களும் 2019 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தாது காணப்பட்டன | நிர்மாணத் தொழிலில் இடம்பெறுகின்ற முன்னேற்றத்துடன் அச்சொத்துக்கள் மீண்டும் வாடகை அடிப்படையில் வழங்கப்படுதல் வேண்டும். | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.7.2 பின்னவல இபெரணிகம தீம் பூங்கா**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | படகுச் சவாரிக்காக 2017 மார்ச் மாதத்தின் போது ரூபா 388,000 தொகைக்கு ஒரு படகு கொள்வனவு | மா ஓயாவில் ஒரு முதலை தென்பட்டதனால் படகுச் சவாரி நிறுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை முறைப்படியாக |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு அந்த ஆண்டின் போது ரூபா 96,520 வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பின்மையால் படகுச் சவாரி 05 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தும் இன்றுவரை முதலை அப்புறப்படுத்தப்படவில்லை. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பூங்கா ஆரம்பிக்கப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்தும் பதவியினர் மற்றும் சம்பள அளவுத் திட்டம் என்பவற்றிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் கிடைக்கவில்லை. எனினும் இது தொடர்பாக மீண்டும் விசாரித்துப் பார்ப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். | பதவியினர் மற்றும் சம்பள அளவுத் திட்டம் சம்பந்தமாக அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

**1.5.7.3 சப்ரகமுவ நூல் நிலையச் சேவைகள் சபை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கேடுகள் பேணப்படாதிருந்தும் சபை ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காமையால் சபையின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு முடியாதிருந்தது. | பிரதம அமைச்சின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நூல் நிலையத்தின் கொடுக்கல் வாங்கல்களுடன் சமர்ப்பிக்கப்படும். | நியதிச்சட்டத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 17 குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக இச்சபை தோற்றுவிக்கப்பட்டிருந்தது. எனினும் அதில் 10 குறிக்கோள்கள் நூல் நிலைய சேவை சபை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிறைவேற்றப்பட்ட 07 குறிக்கோள்களில் 04 குறிக்கோள்கள் மத்திய நூல் நிலையத்துடன் இணைந்து காணப்பட்டன. 02 குறிக்கோள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கடமைகள் இல்லை. வாசகர்களுக்கு தெரியப்படுத்தும் மிகுதி குறிக்கோள்களுக்காக 2022 ஆம் ஆண்டில் 02 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதற்கிணங்க நூல் நிலைய சேவைகள் சபையின் அங்கத்தவர்களுக்கு 2015 ஆம்ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு | 2023 ஆம் ஆண்டிலிருந்து நியதிச் சட்டத்தில் குறிப்பிட்ட 17 குறிக்கோள்களை உள்ளடக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை படியாக ரூபா 5,545,424 செலுத்தப்பட்டிருந்தும் நூல் நிலைய சேவைகள் சபையை தோற்றுவிக்கும் குறிக்கோளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் போது 8,800,000 தொகைக்கு 20,651 புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் 7,028 புத்தகங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது 08 ஆண்டுகள் காலமாக நூல் நிலைய மண்டபத்தில் நிலத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தன. | புத்தக இறாக்கைகளைப் பெற்றுக்கொள்ளல் சம்பந்தமாக பிரதான அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | புத்தகங்கள் வாசகர்களின் பயன்பாட்டிற்காக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.7.4 சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | | **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்** | | |
| | (i) | ஒரு வங்கி கணக்கின் மீதியினை உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 141,336 செலவு மீதி காணப்பட்டிருந்தும் அக்கணக்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | உரிய சரிசெய்தலினை மேற்கொண்டு வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் பணிக்கொடைப் படிகளுக்காக ரூபா 52,007,888 ஒதுக்கீடுசெய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | முன்னைய குறைபாடுகளை சரிசெய்து பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) **வருமான முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 64 கடைகளிலிருந்து 2022 ஆம் ஆண்டின் இறுதியில் 01 மாதத்திற்கும் 13 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலமான பழைய நிலுவைக் கடை வாடகை ரூபா 3,576,162 ஆகும். | நிலுவையாக உள்ள கடை வாடகையானது அறவிடப்படும். | நிலுவைப் பணத்தை துரிதமாக அறவிடுதல் வேண்டும். |
| (ii) | 2022 ஆம் ஆண்டின் போது கேகாலை மாவட்டத்தில் 57 பஸ்களிலிருந்து ரூபா 176,112 தண்டப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 மே 22 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் தண்டப்பணம் ரூா 176,112 தொகை துரிதமாக அறவிடப்படும். | தண்டப்பணமும் மிகைக் கட்டணமும் தாமதமின்றி அறவிடப்படுதல் வேண்டும். |
| (iii) | 74 பஸ் நிறுத்துமிடங்களிலிருந்து 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிலுவையாகக் காணப்பட்ட லொக் பத்திர வருமானம் ரூபா 7,462,850 மற்றும் 46 பஸ்களிலிருந்து மாகாணங்களுக்கிடையிலான நுழைவுக் கட்டணம் ரூபா 1,134,500 அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் போது கேகாலை மாவட்டத்தில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பிக்காத 556 பஸ்களிலிருந்து ரூபா 4,771,450 கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீண்டகால லொக் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத பஸ்களுக்கு மூன்று எழுத்துமூல அறிவித்தல்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் பணிப்பாளர்கள் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வருமானங்களை சரியாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் 03 ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய 43 கடைகளின் வாடகை 5 ஆண்டுகள் கடந்திருந்தும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது கடைகளை மதிப்பீடு செய்வதற்கும் மூன்று ஆண்டுகளுக்கு 10% ஆல் கட்டணத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) செயற்பாட்டு மீளாய்வு**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 திசெம்பர் 21 ஆந் திகதிய 8/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க முன்னைய ஆண்டு தொடர்பான பங்கிலாபம் மாகாண சபை நிதியத்திகு செலுத்தப்படாதிருந்தும் மற்றும் செலவுகளுக்காக மாகாண திறைசேரியிடமிருந்து நிதிகள் பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் 2022 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படிகளாக ரூபா 1,500,586 செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நியதிச்சட்டத்திலுள்ள அதிகாரங்களுக்கு இணங்க பஸ் உரிமையாளர்களின் கடனுக்காக அதிகாரசபை பிணையாக இருந்தது. இதில் 31 நபர்கள் ரூபா 2,876,604 தொகையை செலுத்த தவறியதன் காரணமாக பிணையாளராக அதிகார சபைக்கு ஒரு ஆபத்து காணப்பட்டது. | போக்குவரத்து அமைச்சின் அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கை எடுக்கப்படும் | நியதிச் சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (iii) | மாவட்ட முகாமையாளரை உள்ளடக்கிய பதவிகளுக்காக 09 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் 03 பதவிகளின் அங்கீகரித்த அளவினை விட 52 நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | ஆட்சேர்ப்பு நடைமுறையினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பித்து உரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

### 1.5.7.5 சப்ரகமுவ மாகாணத்தின் வீடமைப்பு அபிவிருத்தி நிதியம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| நிதியத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசு மீதி 292,959 ஆக இருந்ததுடன் அது 2017 ஆம் ஆண்டிலிருந்து மாற்றமின்றிக் காணப்பட்டது. அதற்கிணங்க 2017 ஆம் ஆண்டிலிருந்து நிதியம் செயற்பாடற்றுக் காணப்பட்டது. | புதிய சபையை தோற்றுவித்ததன் பின்னர் நிதியை உறுதிப்படுத்தும் நடைமுறையை தயாரித்து பொருத்தமான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தை தோற்றுவிக்கும் கும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 811 – மாகாண சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) 2006 இன் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களை பதிவுசெய்தல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தனியார் மருத்துவ நிறுவனங்களை தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குபடுத்துதல் சபையில் பதிவுசெய்தல் வேண்டும். எவ்வாறாயினும் மாகாணத்தில் பதிவு செய்யப்படாத 68 மருத்துவ நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. மேலும் அந்த அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஒழுங்குபடுத்துதல் செயற்பாடுகளிலிருந்து உழைக்கின்ற கட்டணங்களில் 50 சதவீதமானவை மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டுகளின் போது அந்த ஒழுங்குபடுத்தல் சபையினால் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கிய ரூபா 3,921,192 தொகையை மாகாண சபைக்கு அனுப்பிவைப்பதற்கு பதிலாக வங்கி நடைமுறைக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த வங்கி | பதிவு செய்தல் தொடர்பாக தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிக்கலை எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கானது மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் 2022 ஒக்தொபர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் மீதி ரூபா 566,992 ஆகும். | | |
| (ஆ) | நீர் வழங்கல் முறைமைக்காக எந்தான பிராந்திய வைத்தியசாலைக்கு 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 471,435 தொகையான உதிரிப்பாகங்கள் பாதுகாப்பின்றி வைத்தியசாலை வளவில் வைக்கப்பட்டிருந்தன. | 228 குழாய்களை எதிர்காலத்தில் தேவைப்பாட்டிற்கு இணங்க சுகாதார நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கை தயார்படுத்தப்பட்டுள்ளது. | சரியாக திட்டமிடப்பட வேண்டியதுடன் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | மாகாண சுகாதார திணைக்களத்தின் 7,693 அங்கீகரித்த பதவியணியில் 735 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் சுகாதார பதவயணியில் 657 பதவிகளும் சுகாதாரம் சாராத பதவியணியில் 78 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. ஒட்டுமொத்த மிகையான பதவியணி 443 ஆக இருந்ததுடன் அவற்றில் சுகாதார பதவியணியில் 143 பதவிகளும் சுகாதாரம் சாராத பதவியணியில் 300 பதவிகளும் ஆக இருந்தன. | சில பதவிகளை பதவியுயர்த்துவதன் மூலம் மத்திய வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படும். மத்திய அரசாங்கத்தினால் இணைத்துக் கொள்ளப்பட்ட பதவிகளை மாகாண சபையினால் கட்டுப்படுத்த முடியாது அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை பூரணப்படுத்திக் கொள்வதற்கும் மிகைப் பதவியினர்களை ஏனைய பொருத்தமான இடங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.9 தலைப்பு 812 – மாகாண ஆயுர்வேத திணைக்களம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | நிதி ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க மருத்துவ பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2021 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 11,332,620 இற்கு 16 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 14 | சிக்கலை இனங்கண்டு பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு போதியளவு இடவசதி காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு மருத்துவ வகைகளைப் பெயரிட்டு அப்பயிர்ச் செய்கை சம்பந்தமான | மகாணத்தில் பயிரிடக்கூடிய மருந்து வகைகளை பயிரிடுவதற்கு ஊக்குவித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வகையான மருந்துகள் மாகாணத்திற்குள்ளேயே பயிரிடக்கூடியவை என இரத்தினபுரி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளரால் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | இலக்கும் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | ரஜவக மருந்துப் பயிர்ச் செய்கை மற்றும் பேணிக்காத்தல் செயற்திட்டத்தின் மூலம் 1998 ஆம் ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் காலத்தில் நிறைவேற்றிய தாவரங்களை பேணிப்பாதுகாக்கும் நடவடிக்கையானது 2004 ஆம் ஆண்டின் போது ஒரு கிராமிய சமூக அமைப்பிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ஆரம்பித்து அந்த பேணிக்காத்தல் நடவடிக்கையானது முழுமையாக தோல்வியடைந்திருந்ததுடன் மருத்துவ "ங்கா அலுவலகமும் 02 ஏக்கர் பயிர்ச் செய்கை காணியும் காடு வளர்ந்து அதற்குரிய வளங்களும் அழிவடைந்து காணப்பட்டது. | அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. | மருந்து தாவரங்களையும் மருத்துவ பூங்காக்களையும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | 02 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் காணப்பட்ட 2019 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,197,875 பெறுமதியான குறைவாக வழங்கப்படுகின்ற மருந்துகள் மிகையாகக் காணப்பட்டன. | எதிர்காலத்தில் தேவையான வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அந்த மருந்துகள் காலாவதியாவதற்கு முன்னர் வழங்கப்படுதல் வேண்டும். |

**1.5.9.1 பின்னவல பஞ்சகர்ம பிரிவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019-2022 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 506,931 தொகையான திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதியை நிதி விதி 377-1 இற்கு இணங்க பெறுமானத் தேய்வு ஓதுக்க நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கின்ற வருமான நிலைமையின் அடிப்படையில் துரிதமாக வருடாந்த பெறுமானத் தேய்வு அளவினை பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண' டும். |

### 1.5.10 தலைப்பு 813 – மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | 2007 இன் 03 ஆம் இலக்க கூட்டுறவு சங்கங்கள் நியதிச்சட்டத்தின் 43(ஆ) பிரிவிற்கு இணங்க அனைத்து பதிவுசெய்த கூட்டுறவு சங்கங்களும் நிதி ஆண்டு முடிவடைந்து 03 மாதங்களுக்குள் இறுதிக் கணக்குகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் கேகாலை மாவட்டத்திலுள்ள 335 சங்கங்களில் 163 சங்கங்கள் 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை 2023 ஏப்ரல் வரையும் சமரப்பித்திருக்கவில்லை. அவ்வாறே நியதிச்சட்டத்தின் 44(i) ஆம் பிரிவிற்கு இணங்க அச்சங்கங்கள் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் சப்ரமுவ மாகாணத்தில் செயற்படுகின்ற 570 சங்கங்களில் 172 சங்கங்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டுவரை கணககாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஞாபகப்படுத்தல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரையறுத்த கடிகமுவ சணச சங்கம் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் இச்சங்கத்தின் கலைத்தல் நடவடிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2011/18 ஆம் இலக்க 2011 சனவரி 03 ஆந் திகதிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 9 ஆம் பிரிவிற்கு இணங்க கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கேகாலை மாவட்டத்திலுள்ள 06 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ரூபா 60,143,000 தொகையும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 03 பல்நோக்கு கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ரூபா 112,159,000 தொகையும் கிராமிய வங்கிப் பிரிவினால் ஏனைய பிரிவுகளுக்கு மாற்றப்பட்டிருந்தன. | 2011 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட நிதிச் சிக்கலினால் கிராமிய வங்கிப் பிரிவின் நிதி ஏனைய வியபாரப் பிரிவுகளின் நடவடிக்கைகளுக்காக பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.11 தலைப்பு இலக்கம் 814 - உள்;ராட்சி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| உள்ளுராட்சித் திணைக்களத்தினால் வருமானத்தை சேகரிக்கும் திட்டம் மற்றும் வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றத்தை காலாண்டு ரீதியாக புலனாய்வு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. இதனால் உள்ளுராட்சி நிறுவனங்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மற்றும் நடைமுறை வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றமானது 50 சதவீதத்தினை விட குறைந்த சதவீதத்தில் காணப்பட்டது | வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை சேகரிப்பதற்காக ஒரு திட்டத்தினை தயாரித்து வருமானத்தை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றத்தை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். |

### 1.5.12 தலைப்பு இலக்கம் 820 – மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டும் இளைஞர் விவகாரமும் மாகாண அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) 1046 வீதி பெயர்ப்பலகைகளை ரூபா 15,063,060 தொகைக்கு வழங்கி பொருத்துவதற்கு 2016 ஆம் ஆண்டின் போது பொறுப்பேற்ற ஒரு ஒப்பந்தக்காரர் அச்செயற்பாட்டை மேற்கொள்ள தவறியிருந்தார். அதற்காக 681 நாட்கள் அதாவது உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தினைப் போல 567 சதவீதத்தினால் கால நீடிப்பினை வழங்குவதற்கு மாகாண வீதி அமைச்சின் பெறுகைக் குழு நடவடிக்கை எடுத்ததனால் ரூபா 752,653 தாமதத்திற்கான தண்டப்பணத்தை அறவீடு செய்யக்கூடிய இயலுமை இல்லாமல் போயிருந்தது. பின்னர் முடிவுறுத்தப்பட்ட பெயர்ப்பலகைகளின் அளவினை ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தினை முடிவுறுத்துவதற்கும் அக்குழு தீர்மானித்திருந்தது. ஒப்பந்தக்காரரரை கறுப்பு பட்டியலில் சேர்த்து உடன்படிக்கையை மீறியதனால் ரூபா | விபரத்திலுள்ள குறைபாட்டுடனான பெயர்ப்பலகை, பிழையான இடங்களில் பொருத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகை, உரிய முறையில் பெருத்தப்படாத பெயர்ப்பலகை என்பவற்றிற்காக முழுமையான கட்டணம் செலுத்தப்படாது கட்டணத்தில் அரைவாசியினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூலப் பொருட்களை வழங்குவதில் சிக்கல் மற்றும் பெயர்ப்பலகையின் ஸ்டிக்கரினை அச்சிடுவதற்கு அதிக | உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டியதுடன் வேலை முடிவுறுத்தப்படாத ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 754,000 செயலாற்றல் பிணை முறியை அறவீடு செய்வதற்கு பதிலாக அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட 155 பெயர்ப்பலகைகளுக்காக ரூபா 1,458,567 தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | காலம் எடுக்கின்றமை என்பன தொடர்பாக கவனித்துப் பார்த்து இரண்டாவது கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிர்மாணங்களுக்காக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது வழங்கிய முற்பணம் ரூபா 4,812,644 மீளாய்வாண்டின் இறுதியளவில் 15 ஆண்டுகளைக் கடந்திருந்தும் தீர்த்துவைக்கப்படவில்லை. | ஒப்பந்தக்காரருக்கு எதிராக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.13 தலைப்பு 821 – மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண விளையாட்டு நியதிச்சட்டத்தின் பிரகாரம் விளையாட்டு சபையை தோற்றுவித்தல், விளையாட்டினை அபிவிருத்தி செய்தல், விளையாட்டு நிதியத்தை பேணுதல், விளையாட்டு சங்கங்களைப் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும், விளையாட்டு புலமைப்பரிசில்களையும் நிபுணத்துவ நிறுவனங்களையும் உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகள் 2023 பெப்ரவரி வரை விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டுப் பிரிவினை பல்வேறு அமைச்சுக்களுக்கு மாற்றியதனாலும் மாகாண சபை கலைக்கப்பட்டதனாலும் விளையாட்டு விடயத்திற்கு ஒரு அமைச்சு இல்லாததனாலும் நியதிச்சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதற்கு அதிகாரம் காணப்படவில்லை. | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 47 ஆவது தேசிய பொது விளையாட்டு விழா தொடர்பாக பிரிவுகளுக்கிடையிலான விளையாடடுக்களுக்காக 680 நபர்கள் தகைமை பெற்றிருந்தும் அவர்கள் அனைவரையும் பங்குபற்றச் செய்வதற்கு முடியுமான வகையில் | யூ'லை, ஆகஸ்ட் மாதங்களின் போது ஆரம்ப கட்டத்தினூடாக நடாத்தப்பட்டது. 2022 திசெம்பர் மாதமளவில் முற்பணங்கள் | நியமிக்கப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்த உடன் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| பெருத்தமான வேலைத் திட்டம் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திடம் இல்லாதிருந்ததனால் அவர்களில் 545 நபர்கள் சப்ரகமுவ மாகாணத்தை பிரதி நிதித்துவம் செய்வதற்காக முன்வருவதற்கு முடியாதிருந்தது. | தீர்த்துவைக்கப்பட்டன. |

**1.5.14 தலைப்பு 830 – சமூக நலன்புரி, நன்னடத்தைகளும் சிறுவர் பாதுகாப்பும், கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமியக் கைத்தொழில் மாகாண அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் தீர்த்துவைக்கப்படாத உப கட்டுநிதி மீதியாகிய ரூபா 960,475 இனை மீளாய்வாண்டின் போது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற நடைமுறைகளுக்கு அனுப்பிவைப்பதற்கு சட்டமா அதிபரின் உதவி வேண்டப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.14.1 மாகாண சமூக சேவை நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதியத்தினால் ரூபா 61,000,000 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தும் இந்த நிதியத்தினை தோற்றுவிப்பது தொடர்பாக நியதிச்சட்டத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதரவற்ற மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்காக போசாக்கு மற்றும் கல்வி உதவிகளை வழங்கும் நடவடிக்கையானது மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்கவில்லை. | உதவிகளை வழங்குவதற்குத் தேவையான செயற்திட்ட அறிக்கை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றது. | நியதிச் சட்டத்தின் பிரகாரம் நிதியினை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.15 தலைப்பு 831- மாகாண கைத்தொழில் திணைக்களம்**

**1.5.15.1 ஆடைக் கைத்தொழில் நிலையங்களை உருவாக்குதலும் நிருவகித்தலும்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கோலை மாவட்டத்தில் அமைந்துள்ள 03 நிலையங்கள் மூடப்பட்டதன் காரணமாக ரூபா 6,200,000 பெறுமதியான காணியும், கட்டிடமும் 2007 ஆம் ஆண்டிற்கும் 2017 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | இச்சொத்துக்கள் தொடர்பாக பிரதேச செயலாளருக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு அல்லது பொருத்தமான வகையில் ஏனைய செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2011-2022 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 40,448,121 பெறுமானத் தேய்வுப் பெறுமதியை நிதி விதி 377.1 இற்கு இணங்க பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கும் வகையில் மாகாண திறைசேரிக்கு தெரியப்படுத்தியிருக்கவில்லை. | நிதி நிலைமை சிறப்பாக அமைந்ததன் பின்னர் மாகாண திறைசேரிக்கு அனிப்பிவைக்கப்படும். | நிதிவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2014-2022 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலம் தொடர்பாக ரூபா 20,217,320 தொகையான தேறிய இலாபம் நிதி விதி 378.2 இற்கு இணங்க மாகாண சபை நானாவித வருமானத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமை சிறப்பாக அமைந்ததன் பின்னர் மாகாண திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படும். | நிதி விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.16. தலைப்பு 840 – கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார அலுவல்கள் மாகாண அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கல்வி அமைச்சிற்கு கடந்த 03 ஆண்டுகளில் கிடைத்த 70 ஒழுக்காற்று | வலயக் கல்வி அலுவலகத்திற்கு உரிய | ஒழுக்காற்று விசாரணைகளை |

| | | | |
|---|---|---|---|
| | முறைப்பாடுகளில் 39 முறைப்பாடுகளை அதாவது 56 சதவீதமானவைகளை 2023 பெப்வரி வரையும் விசாரணை செய்தல் முடிவடைந்திருக்கவில்லை. | அறிக்கையினை வழங்குவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. | ள துரிதமாக முடிவுறுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இர/புஸ்ஸல்ல மகாவித்தியாலயத்தின் ஒர் கட்டிடத்திற்கு பரப்பப்பட்ட டயில்களின் ஒரு பகுதி கழன்று போயிருந்தமை மற்றும் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கிகளிலிருந்து எதிர்பார்த்த பயன்பாடு கிடைக்காமையால் அவற்றிற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 645,994 சிக்கனமற்ற செலவாக ஆகியிருந்தது. | நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து பிடித்துவைத்தல் பணத்தை செலுத்தாது அக்குறைபாட்டினை சரிசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறைபாடுகள் சம்பந்தமாக உடன்படிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இர/ அயகம சிறீ ராகுல மத்திய மகா வித்தியாலயத்தில் 2015 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டு வந்த மலசல கூட முறைமையானது 2016 யூன் மாதத்தின் போது நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டதனால் அதற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 1,879,920 தொகை விளைவற்ற செலவாக ஆகியிருந்தது. இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால் 2019 பெப்ரவரி மாதத்தில் தனது அறிக்கையினை வழங்கி 2022 திசெம்பர் மாதமளவில் 03 அண்டுகள் கடந்திருந்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அந்த அறிக்கைக்கு இணங்க ஏற்பட்டிருந்த ரூபா 506,062 நிதி நட்டம் மற்றும் ரூபா 77,310 பிழையான கொடுப்பனவினை தீர்த்தக்கொள்ள முடியாதிருந்தது. | அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அரசாங்கத்திற் கு ஏற்பட்டுள்ள நிதி நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஈ) | அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் ரூபா 500.98 மில்லியன் தொகையான 24 நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன. | கட்டுநிதி கிடைப்பதிலுள்ள தாமதம் மற்றும் நிர்மாண வேலைகளை தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்கு பல்வேறு தடைகள் காணப்பட்டதனால் இந்த நிர்மாண நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. | இக்கட்டிடத்திளை ன பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள் ளக் கூடிய நிலைக்கு மாற்றுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) 03 நிர்மாண நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,321,323 முற்பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலைப்பட்டியல்கள் கிடைத்த உடன் இம்முற்பணங்கள் தீர்த்துவைக்கப்படும். | முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.16.1 சப்ரகமுவ முன்பள்ளி கல்வி அபிவிருத்தி அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சப்ரகமுவ மாகாணத்திலுள்ள அனைத்து முன்பள்ளி அபிவிருத்தி நிலையங்களையும் பதிவு செய்தல் அதிகார சபையின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் வரை மாகாணத்தில் பதிவு செய்யப்படாத 360 முன்பள்ளிகள் காணப்பட்டதுடன் பதிவுசெய்த 1407 முன்பள்ளிகளில் 941 முன்பள்ளிகள் 2022 ஆம் ஆண்டிற்காக பதிவினைப் புதுப்பித்திருக்கவில்லை. | பதிவினை நாளதுவரையாக்காத 941 முன்பள்ளிகளில் 366 முன்பள்ளிகள் தற்பொழுது பதிவினைப் பெற்றுள்ளது. | பதிவு செய்யாத முன்பள்ளிகளைப் பதிவு செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.17 தலைப்பு 841 – மாகாண கல்வித் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 07 கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளிலுள்ள 585 உத்தியோக பூர்வ இல்லங்களில் 195 உத்தியோகபூர்வ இல்லங்கள் திருத்தம் செய்யப்பட வேண்டிய நிலையிலும் 74 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலையிலும் காணப்பட்டதுடன் 63 உத்தியோக" ர்வ இல்லங்கள் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மிக விரைவாக எடுக்கப்படும். | சொத்துக்களை குறிக்கோளிடப்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மாகாண கல்வி அலுவலகங்கள், வலய கல்வி அலுவலகம், 1080 பாடசாலைகள், என்பவற்றின் காணிகளை கணக்கீடு செய்வதற்கு தேவையான மதிப்பீடு செய்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னணித் தேவைப்பாடாகக் கருதி அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | நடைமுறையற்ற சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மாகாண கல்வித் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணித் தகவல்களைப் பரீட்சித்த போது சிரேஷ்ட மட்டத்திலும் இரண்டாம் மட்டத்திலும் 13 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் 10 நபர்களும் தகவல் தொழில்நுட்ப உத்தியோகதர் சேவையில் ஒரு நபரும் மிகையாகக் காணப்பட்டனர். | வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான வேண்டுதல் சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மற்றும் கல்வி அமைச்சு செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மிகையான உத்தியோகததர்கள் தொடர்பான தகவல்கள் பிரதம செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் மிகையான பதவியணினர்களை பொருத்தமான வகையில் இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சப்ரகமுவ மாகாணத்தின் அங்கீகரித்த ஆசியரியர் பதவியணி 24,401 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 20,758 ஆக இருந்ததனால் ஆசிரியர் பற்றாக்குறை 3643 ஆகும். | ஏற்றுக்கொள்கிறேன். | வெற்றிடங்களை நிரப்புதல் வேண்டும். |
| (உ) | வலய கல்வி அலுவலகங்களில் 819 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும் பாடசாலை பதவியணியில் 1349 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும் ஆன வகையில் சப்ரகமுவ மாகாணத்தில் 2168 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகைகள் காணப்பட்டன. | தேவையான அளவினை விட மிகையாக அரசாங்கத்தினால் இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் அவர்களுக்கு நிறுவனத்திற்குள் வெற்றிடங்கள் இல்லை என்பதனால் வலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளல் இடம்பெற்றுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பி மிகைகளை பொருத்தமான வகையில் இணைத்துக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | சப்ரகமுவ மாகாணத்தில் 05 பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளும், 14 உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகளும், 02 பிரிவுக் கல்விப் பணிப்பாளர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மாவனல்லை வலயக் கல்வி அலுவலகத்தின் 05 பிரதிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. | இங்கே காணப்பட்ட வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு உரிய வேண்டுதல்கள் சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் மிகையான பதவியிணர்களை ஏனைய பொருத்தமான இடங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | கேகாலை வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலை பதவியணியில் 10 ஆசிரியர் ஆலோசகர் சிங்கள மொழி பதவிகளும், 01 ஆசிரிய ஆலோசகர் தமிழ் மொழி பதவியும் தெஹியோவிட வலயக் கல்வி அலுவலகத்தின் பாடசாலை பதவியணியில் 55 விளையாட்டு பயிற்சியாளர் பதவிகளும் அங்கீகரித்துக்கொள்ளப்படாது வரிசை அமைச்சின் ஏற்பாட்டின் அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். | மாகாண சபை பாடசாலைகளின் விளையாட்டு பயிற்றுவிப்போர் பதவிக்காக மத்திய அரசாங்கத்தின் வரிசை அமைச்சு நிதி ஏற்பாட்டின் மூலம் சம்பளம் செலுத்தப்படுகின்றது. மாகாண சபை அங்கீகரித்த பதவியிணருக்குள் இப்பதவிகள் உள்ளடக்கப்படவில்லை. | மிகைப் பதவியினர்களை ஏனைய பொருத்தமான இடங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மாகாணத்தில் 475 அதிபர் பதவிகளும் 67 பிரதி அதிபர் பதவிகளும் 116 உதவி அதிபர் பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் மாவனெலல வலயக் கல்வி அலுவலகத்தில் 14 பிரதி அதிபர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டன. 397 பாடசாலைகளின் அதிபர் பதவிகளுக்காக நிரந்தர நியமனம் வழங்கப்படாது 03 மாதங்களுக்கும் 32 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக பதில் கடமை அதிபர்களாக ஆசிரியர் சேவையிலுள்ள 397 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். | மாகாணதத்தில் அதிபர் பதவிகள், பிரதி அதிபர் பதவிகள் மற்றும் உதவி அதிபர் பதவிகளின் மொத்த அங்கீரித்த எண்ணிக்கை 1453 ஆக இருந்ததுடன் உள்ளபடியான எண்ணிக்கை 752 ஆகும். அதற்கிணங்க வெற்றிடங்கள் 701 ஆகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 06 வலயக் கல்வி அலுவகங்களுக்குரிய 271 பாடசாலைகளில் 2008 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆசிரியர் சேவைக்கு நியமனங்களைப் பெற்றுக்கொண்ட 512 ஆசிரியர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையற்ற ஆவணங்கள், கடிதங்களை ஒப்படைப்பதில் தாமதம், விடுமுறை அங்கீகரிக்கப்படாமை, உறுதிப்படுத்தப்படாத பரீட்சைப் பெறுபேறுகள், தனிப்பட்ட கோவைகளைப் பெறுவதில் தாமதம், மொடியு' ல்களா' பூரணப்படுத்தப்படாமை, தொடக்க புலனாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆசரியிர்களின் சேவைகளை நிரந்தரமாக்குவது தாமதமடைந்தமைக்கு காரணமாகும். | தாபன விதிக் கோவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட 32 ஆசரியிர்களில் 15 ஆசிரியர்கள் தொடர்பாக விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சேவைக்கு அறிக்கையிடல், வருகைதரல் மற்றும் வெளிச் செல்லல் அறிக்கை, விடுமுறை அறிக்கை, விடுவிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளாப்பட்ட படிகள் தொடர்பான அறிக்கை முதலியவை தொடர்பாக எதுவித உறுதிப்படுத்தலுமின்றி வலயக் கல்வி அலுவலகங்களினால் சம்பளமாகச் செலுத்தப்பட்ட ரூபா 20,575,366 தொகையை மீள் நிரப்பல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தெஹியோவிடவிற்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் ஏனைய வலயங்களின் உத்தியோகத்தர்களது தகவல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்று மீள் நிரப்பல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.18 தலைப்பு 850- காணி, மாகாண நீர்ப்பாசனம் விவசாயம், கால் நடை உற்பத்தியும் கால்நடை சுகாதாரமும் மற்றும் மீன் பிடிச் செயற்பாடுகள் மாகாண அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பூர்த்திசெய்த 07 நீர்ப்பாசன வேலைகளின் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 582,800 செலுத்தப்பட்டிருந்தது. | செய்யப்படாத வேலைகளுக்காக ரூபா 732,325 பணம் செலுத்தப்பட்டுள்ளது. | செய்யப்படாத வேலைகளுக்காக செலுத்திய பணத்தை துரிதமாக அறவிடுதல் வேண்டும். |

**1.5.19 தலைப்பு இலக்கம் 851 – மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 02 பிரதேச செயலகங்களின் 06 நீர் செயற்திட்டம் தொடர்பான ரூபா 2,465,059 மொத்த பெறுமதியான நிலுவையாகவுள்ள நீர் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இன்றுவரை பணம் செலுத்தப்படவில்லை. | நிலுவையான நீர் வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 90,230,365 தொகையான காணிக் குத்தகை மீதியானது அறவிடப்பட்டிருக்காததுடன் அதில் ரூபா 30,962,117 தொகையானது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். | பிரதேச செயலகத்திடமிருந்து நிலுவை வரித் தகவல்கள் கோரப்பட்டு நிலுவை வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதி விதியின் பிரகாரம் துரிதமாக நிலுவையாகவுள்ள வரிப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சப்ரகமுவ மாகாணத்தில் 2019-2022 ஆண்டுகளுக்கிடையே பெற்றுக்கொள்ளப்பட்ட நில அளவை வேண்டுதல்கள் 615 ஆகும். ஒவ்வொரு ஆண்டின் போதும் திணைக்களத்தின் நில அளவை உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் அவற்றில் 526 வேண்டுதல்கள் அதாவது 85 | நிலஅளவை உத்தியோகத்தர்களை வழங்குமாறு வேண்டி காணி ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. | நில அளவை நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

தவீதமான நில அளவை நடவடிக்கைகள் 2022 செப்தெம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.20 மாகாண விவசாயத் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| "சஜீவ்ய" சேதனப் பசளை நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்ட சப்ரகமுவ மாகாணத்தின் சேதனப் பசளை தேவைப்பாடு 45,665 மெற்றிக் தொன்களாகும். அந்த இலக்கினை இரண்டு ஆண்டுகளுக்குள் "ரணப்படுத்துவது அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளாகும். எனினும் அந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தி 8950 மெற்றிக் தொன்களாக இருந்ததுடன் குறிக்கோளை நிறைவேற்றுதலின் வெற்றித்தன்மை 19.6 சதவீதமாகும். அதற்கிணங்க செயற்திட்டத்திற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட ரூபா 73,700,000 சிக்கனமற்ற செலவாக இருந்ததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை மீண்டும் வெற்றிபெறச் செய்வதற்காக எந்த வேலைத் திட்டமும் இருக்கவில்லை. | மீண்டும் இரசாயப் பசளைகள் கொண்டுவரப்படுவதனால் மக்களின் இந்த ஆர்வத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன் இந்த இலக்கினை பூரணப்படுத்த முடியாதுள்ளது. | நில அளவை நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்திசெய்தல் வேண்டும். |

### 1.5.21 தலைப்பு 853 – கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தனியார் கட்டிடங்களில் செயற்பட்டு வருகின்ற 04 கால்நடை மருத்துவ அலுவலகங்களுக்காக 1993 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான வாடகையாக ரூபா 4,213,900 செலுத்தப்பட்டிருந்தும் அவற்றினை அரசாங்க கட்டிடங்களில் செயற்படுத்துவதற்கு உள்ள இயலுமை ஆராய்ந்து பார்க்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கட்டிடங்களை பிராந்தியத்தில் தேடிக்கண்டு பிடிக்க முடியாத சந்தர்ப்பங்களில் வாடகைக் கட்டிடங்களில் அலுவலகங்கள் செயற்படுத்துதல் இடம்பெற்றுள்ளது. | அரசாங் அலுவலகங்களை அரசாங்க கட்டிடங்களில் செயற்படுத்துவதற்கு இயலுமான அனைத்து முயற்சிகளும் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் 06 உத்தியோக பூர்வ இல்லங்கள் எதுவித திருத்த வேலைகளும் இன்றி 2014 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் அளவுக்கு இணங்க உத்தியோக பூர்வ இல்லங்ளை திருத்தம் செய்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய காலப்பகுதிக்குள் உத்தியோக பூர்வ இல்லங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்தல் வேண்டும். |

**1.5.21.1 உந்துகொட கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 02 கால்நடை உணவு வகைகள் காணப்பட வேண்டிய அத்தியவசியமான ஊட்டச்சத்து சேர்மானமானது அங்கீகரித்த எல்லைக்குள் இல்லை என்பதனை கால்நடை மருத்துவ ஊட்டச்சத்து நிறுவனம் உறுதிப்படுத்தியிருந்தது. எனவே 1,527,750 தொகையான அந்த 10,000 கிலோ கிராம் கால்நடை உணவுகளை நிராகரித்து திருப்பி அனுப்புவதற்குப் பதிலாக இன்னும் அந்த உணவுகள் மிருகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. . | ஊட்டச்சத்து குறைந்த உணவுகளை களஞ்சியத்திலிருந்து அகற்றுமாறு, வழங்குனருககு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | கால்நடை உணவுகளை வழங்கும் போது முறையான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 20 ஏக்கர்கள் அளவான காணி காடு வளந்து பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பண்ணையின் காணியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியை உச்ச அளவில் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கோழிப் பிரிவு காணப்பட்ட ரூபா 3,500,000 பெறுமதியான 04 கட்டிடங்கள், 2018 திசெம்பர் மாதத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 232,050 தொகையான 273 கொங்கிரீட் தூண்கள், ஒரு உத்தியோகபூர்வ இல்லம் என்பன 2021 ஒக்தோபர் மாதத்திலிருந்து விளைவற்றுக் காணப்பட்டன | 2023 ஆம் ஆண்டிலிருந்து அனைத்து கட்டிடங்களையும் பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கொங்கிரீட் தூண்களை நடுகைசெய்து முடிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்தப்படாது காணப்பட்ட சொத்துக்களை தரிதமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |